அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஆறு

## நேரம்: 210 நிமிடங்கள்

**முதலாம் வினாவிற்கும், ஏனையவற்றுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. தாளதசப் பிராணன்களை வரிசைக்கிரமமாக எழுதுக.

   ஆ. யதியின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

   இ. டமருயதியை இறுதியாகக் கொண்ட ரூபகதாள ஆறு ஆவர்த்தன கோர்வை ஒன்றினை தாள அங்க குறியீட்டுடன் எழுதுக.

(20 புள்ளிகள்)

2. தென் இந்தியாவிற்குரிய நடன மரபினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
   1. தோற்றம்
   2. வளர்ச்சி
   3. பயன்படுத்தும் இசைக்கருவிகள்
   4. ஆடல்முறை
   5. ஆடை, அணிகள், ஒப்பனை (16 புள்ளிகள்)

3. பரதநாட்டியக் கச்சேரியில், பயன்படும் பிரதான லய வாத்திய கருவியின் அமைப்பினையும் அதன் பங்களிப்பினையும் விளக்குக. (16 புள்ளிகள்)

4. நீர் கற்ற தோடயமங்களத்தின் முதலாவது கண்டிகையின் இராகம், தாளத்தினை குறிப்பிட்டு, முதலாவது கண்டிகைக்குரிய சாகித்தியத்தின் கருத்தினையும், கண்டிகையின் இறுதியில் வரும் தீர்மானப்பகுதியைத் தாள அங்க குறியீட்டுடனும் எழுதுக. (16 புள்ளிகள்)

5. கூத்து வகைகளைக் குறிப்பிட்டு, வடமோடி தென்மோடிக் கூத்தின் ஆட்டமுறைகள், ஒப்பனை, வாத்தியங்கள் உடைகள் பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

(ம.ப.பா)

6. பின்வரும் கலைச்சொற்களை விளக்குக.
   அ. புஷ்பாஞ்சலி
   ஆ. காவடி
   இ. கிரஹம்
   ஈ. திருவாசகம் (16 புள்ளிகள்)

7. கலாசேஷ்த்ரா நடனப்பள்ளியினை அமைத்து, கலைத்தொண்டாற்றிய பெருமைக்குரியவரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதுக. (16 புள்ளிகள்)

8. "புலம்பெயர் நாடுகளில் 21ம் நூற்றாண்டில் பரதக்கலை" – மேற்படி தலைப்பின் கீழ் உமது கருத்துக்களை ஆராய்க. (16 புள்ளிகள்)